மழைநீர் சேமிப்போம்""                                        பிளாஸ்டிக்கை தவிர்ப்போம் ""

நகராட்சி அலுவலகம்,
தேனி - அல்லிநகரம் ,
நாள் : 23.01.2023

## நகர்மன்ற அவசரக் கூட்ட அழைப்பிதழ்

நிகழும் திருவள்ளுவர் ஆண்டு, சுபகிருது வருடம், தை மாதம் 11-ம்நாள் 25.01.2023-ம் தேதி புதன் கிழமை காலை 11.00 மணிக்கு நகர்மன்ற கூட்டரங்கில் நகர்மன்ற அவசரக் கூட்டம் நடைபெறும். அது சமயம் நகர்மன்ற உறுப்பினர்கள் அனைவரும் தவறாது கலந்து கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

(ஒ.ம்)பா.ரேணுப்பிரியா
நகர்மன்ற தலைவர்,
தேனி -அல்லிநகரம் நகராட்சி.

**பொருள் 01:-**

சென்னை, நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களின் 10.01.2023-ஆம் தேதிய ந.க.எண்.35945/2022/EA2 -SWM-18 - உத்திரவில் தேனி -அல்லிநகரம் நகராட்சி பகுதியில் திடக்கழிவு மேலாண்மை பணிகளின் கீழ் குப்பைகள் உருவாகும் இடங்களிலேயே மக்கும் குப்பை மற்றும் மக்காத குப்பை என தனித்தனியாக பிரித்து சேகரம் செய்து நுண் உர செயலாக்க மையம் மற்றும் மறு சுழற்சி செய்யும் இடத்திற்கு கொண்டு சேர்க்க டன் ஒன்றி ற்கு ரூ : 4,163.50 என நிர்ணயம் செய்து தகுதியான தனியார் ஒப்பந்த நிறுவனத்தை ஆண்டு ஒன்றிற்கு ரூ : 603.74 லட்சம் மதிப்பீட்டில் மூன்று ஆண்டுகளுக்கு தேர்வு செய்ய அனுமதி வழங்கி உத்திரவிடப்பட்டுள்ளது.

மேற்கண்ட உத்திரவின்படி இந்நகராட்சி பகுதியில் உள்ள வீடுகள் மற்றும் வணிக நிறுவனங்களில் தினசரி தேவையான பணியாளர்கள் மற்றும் வாகனங்கள் பயன்படுத்தி குப்பைகளை தரம் பிரித்து சேகரம் செய்யும் பணிக்கு மூன்று ஆண்டுகளுக்கு தகுதியான தனியார் நிறுவனத்தை தேர்வு செய்யும் பொருட்டு ஒப்பந்தப்புள்ளி கோரவும் அதற்கான செலவினத்திற்கும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்கண்ட செலவினங்களை பொது நிதி மற்றும் 15th CFC, SWM Tied மான்யத்திலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண். 3097 / 2022 / எச்1)

**தீர்மான எண்: 315**

**தீர்மானம் : அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.**

(ஒ.ம்)பா.ரேணுப்பிரியா
நகர்மன்ற தலைவர்,
தேனி -அல்லிநகரம் நகராட்சி.

// உண்மை நகல் //

ஆணையாளர்,
தேனி-அல்லிநகரம் நகராட்சி.